

சென்னை, கலைவாணர் அரங்கில் நேற்று (03.04.2025) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு. பெ. சாமிநாதன் தமிழ்நாடு அரசின் மக்கள் நலச் செயல்பாட்டினை அறியும் விதமாக செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் நடைபெற்ற லவ் டிஎன் (LoveTN) போட்டிகளில் வெற்றி பெற்ற 41 நபர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் உயரதிகாரிகள் வே. ராஜாராமன், இரா.வைத்திநாதன், ச.செல்வராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# செய்யாற்றின் குறுக்கே தரைப்பாலம் கட்டித் தரப்படும்!

## சட்டப்பேரவையில் – அமைச்சர் துரைமுருகன் உறுதி!

சென்னை, ஏப். 4-

சட்டப்பேரவையில்கேள்வி நேரத்தின்போது நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ண மூர்த்தி:** போளூர் சட்டமன்றத் தொகுதி, போளூர்வந்தவாசி சாலைதேவிகா புரத்திலிருந்து பத்தியாவரம், ஓதலவாடி வழியாக சதுப்பேரிபாளையம் சாலையின் குறுக்கே செல்கிற செய்யாற்றின் குறுக்கே கட்டப்பட்டிருந்த தரைப்பாலம் கடந்த ஃபெஞ்சல் புயலின் காரணமாகவும், கடுமையாகப் பெய்த மழையின் காரணமாகவும் அடித்துச் செல்லப்பட்டு விட்டது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியை நன்றாக அறிந்தவர். அந்தப் பகுதியிலே நாடாளுமன்றத் தேர்தலிலே போட்டியிட்டவர்.



எனவே, அந்தப் பகுதி மக்களினுடைய நலன் கருதி, அந்தப் பாலத்தின் வழியாக தினந்தோறும்

2 ஆயிரத்திற்கும் அதிகமான மாணவ, மாணவிகள் பள்ளிகளுக்குச் செல்கிற காரணத்தினாலே தரைப்பாலமாக அமைத்து தர வேண்டும். எனவே, பொதுமக்களின் நலன் கருதி, பாதிக்கப்பட்ட, அடித்துச் செல்லப்பட்ட அந்தப் பாலத்தை மீண்டும் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் துரைமுருகன்:** நான், Parliament electionல் அந்தத் தொகுதியில் நின்றேன் என்று உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அப்போது தான் ஓட்டு போடவில்லையே... இப்போது கேட்டால் எப்படி? (சிரிப்பு)

அந்த தரைப்பாலம் என்னுடைய துறையின்கீழ் வருகிறதா அல்லது நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கு வருகிறதா என்பதை ஆய்வு செய்து, யாருடைய துறையின்கீழ் வருகிறதோ, அந்தத் திட்டம் நிறைவேற்றித் தரப்படும்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

## முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி

# எழும்பூர் தொகுதி புதிய சட்டமன்ற அலுவலகக் கட்டிடம் கட்டும் திட்டப் பணி!

## இ.பரந்தாமன், எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்

சென்னை, ஏப். 4 -

தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகக் கட்டிடம் அரசால் கட்டித் தரப்பட வேண்டும் என ஏற்கெனவே அரசாணை வெளியிடப்பட்டு நடைமுறையில் இருந்து வருகிறது. எனினும், எழும்பூர் சட்டமன்றத் தொகுதிக்கென சட்டமன்ற அலுவலகக் கட்டிடம் இல்லாமல் இருந்தது. மாண்புமிகு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் கழக ஆட்சி அமைந்தவுடன், எழும்பூர் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வழக்கறிஞர் இ.பரந்தாமன், எழும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குச் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகக் கட்டிடம் இல்லை என்பதையும், அலுவலகக் கட்டிடம் கட்டித் தரப்பட வேண்டும் என்பதையும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்றார். இக்கோரிக்கையைப் பரிசீலித்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் எழும்பூர் தொகுதி உட்பட சட்டமன்ற அலுவலகக் கட்டிடம் இல்லாத அனைத்துத் தொகுதிகளிலும் சட்டமன்ற அலுவலகக் கட்டிடம் கட்டித் தருவதற்கான உத்தரவைப் பிறப்பித்தார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் இந்த உத்தரவின் அடிப்படையில், எழும்பூர் தொகுதிக்கான சட்டமன்ற உறுப்பினர் அலுவலகக் கட்டிடம், எழும்பூர் தொகுதி, வார்டு எண்.108, மேயர் இராமநாதன் சாலை, சேத்துப்பட்டு காவல் நிலையத்திற்கு அருகில் உள்ள சென்னை மாகராட்சிக்குச் சொந்தமான காலிமனையில் கட்டுவதற்கான நிர்வாக ஆணை பிறப்பிக்கப்பட்டது. மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான இந்த நிலத்தை, சட்டமன்ற உறுப்பினர் அலுவலகக் கட்டிடம் கட்டுவதற்கு ஏற்ப நிலத்தின் உரிமையைப் பொதுப்பணித்துறைக்கு மாற்றி அளித்தார். நில உரிமை மாற்றத்திற்குப் பிறகு, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் அக்காலிமனையில் ரூ.85 இலட்சம் மதிப்பீட்டில் எழும்பூர் தொகுதிக்கான சட்டமன்ற உறுப்பினர் அலுவலகக் கட்டிடம் கட்டித் தருவதற்கான நிர்வாக மற்றும் நிதி ஒப்புதலை வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து, எழும்பூர் தொகுதி, வார்டு எண்.108, மேயர் இராமநாதன் சாலை, சேத்துப்பட்டு காவல் நிலையத்திற்கு அருகில் ரூ.85 இலட்சம் மதிப்பீட்டில் எழும்பூர் சட்டமன்றத் தொகுதிக்கான சட்டமன்ற அலுவலகம் கட்டிடம் கட்டித் தரும் திட்டப் பணிக்கு கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்வின்போது, எழும்பூர் சட்டமன்றத் தொகுதிக்கான சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் கட்டும் திட்டப் பணிக்கு ஒப்புதல் அளித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், இக்கோரிக்கைக்கு உறுதுணையாக இருந்த மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், சென்னை மாநகராட்சிக்குச் சொந்தான நிலத்தைச் சட்டமன்ற அலுவலகக் கட்டிடம் கட்டுவதற்கு ஏற்ப நில உரிமையினை மாற்றித் தந்த மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு அவர்களுக்கும், ரூ.85 இலட்சம் மதிப்பீட்டில் சட்டமன்ற அலுவலகம் கட்டுவதற்கு நிர்வாக மற்றும் நிதி ஒப்புதலை வழங்கிய மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களுக்கும் சட்டமன்ற உறுப்பினர் இ. பரந்தாமன், தனது தொகுதி மக்களின் சார்பாக நன்றியினைத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரிகள், பொதுப்பணித்துறை அதிகாரிகள் மற்றும் எழும்பூர் தொகுதியைச் சேர்ந்த தி.மு. கழக நிர்வாகிகள், செயல்வீரர்கள்; கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் உள்ளிட்டு இருநூறுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.



எழும்பூர் தொகுதி, வார்டு எண்.108, மேயர் இராமநாதன் சாலை, சேத்துப்பட்டு காவல்நிலையத்திற்கு அருகில் ரூ.85 இலட்சம் மதிப்பீட்டில் எழும்பூர் சட்டமன்றத் தொகுதிக்கான புதிய அலுவலகக் கட்டிடம் கட்டும் திட்டப் பணிக்கு, கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் அடிக்கல் நாட்டினார்.



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை, மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

மண்டலம்–4 க்கு உட்பட்ட தருமபுரி கிழக்கு, தருமபுரி மேற்கு, நாமக்கல் கிழக்கு மற்றும் நாமக்கல் மேற்கு ஆகிய மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக அறிவிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 07.04.2025 திங்கட்கிழமை | மாலை 4.00 மணி | தருமபுரி கிழக்கு | கே.ஜே.பிளாசா, சேலம் பிரதான சாலை, தருமபுரி. |
| 08.04.2025 செவ்வாய்க்கிழமை | காலை 9.00 மணி | தருமபுரி மேற்கு | என்.என்.மஹால், சேலம் புறவழிச் சாலை, அரூர், தருமபுரி. |
| 09.04.2025 புதன்கிழமை | காலை 9.00 மணி | நாமக்கல் கிழக்கு | நளா ஹோட்டல், திருச்சி சாலை, நாமக்கல். |
| 10.04.2025 வியாழக்கிழமை | காலை 9.00 மணி | நாமக்கல் மேற்கு | கொங்கு சமுதாயக்கூடம், அண்ணா சிலை அருகில், திருச்செங்கோடு. |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 03-04-2025






